பரமஹம்ஸ

# ஸ்ரீ பரத்வாஜ் ஸ்வாமிகளின்

## அருளுரை

மாதா ஸ்ரீ புவனேஸ்வரியின் கருணாபிரவாகத்தினாலே திருமதி ரங்கநாயகி சேஷாத்ரி அவர்கள் எனது தகப்பனார் ஸ்ரீ புவனேஸ்வரி ஸ்வாமிகளின் மீது, ஸ்வாமிகளின் மகிமை என்ற புத்தகத்தை மிகுந்த பக்தியுடனும், பிரேமையுடனும் எழுதியுள்ளார்கள். ஸ்ரீ ஸ்வாமிகளை பற்றி பல நல்ல தகவல்களும், செய்திகளையும் கவிதை நடையில், முத்துமுத்தாக வர்ணித்துள்ளார்கள், அளவற்ற பக்தியாலுள்ள நிகரற்ற அன்பினாலும்தான் இதை எழுத முடியும். ஸ்ரீ ஸ்வாமிகளின் சீடர்களுக்கு இது பலவிதத்தில் பயன்படும்படியாக அமைந்துள்ளது. ரங்கநாயகி நல்ல எழுத்து பெட்டகமாக திகழ்கிறார். அவரது சீரிய படைப்பு பலருக்கு உபயோகப்படும். இதை அச்சிட்ட அன்னை புத்தகாலயம் அன்பர்களுக்கும், கவிதாயினி ரங்கநாயகி சேஷாத்ரி அவர்களுக்கு நீங்காத செல்வம் நிறைந்து வாழ ஸ்ரீ புவனேஸ்வரி ஸ்வாமிகளின் அருளை சிந்திக்கிறேன்.

ஸ்வாமி பரத்வாஜ்